முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கலிக்கம்ப நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

04.12.2018, செவ்வாய்க்கிழமை

1. **அருந்தவ சித்தே அரங்கராசா**
**அறமாக கலியுக சிக்கலை**
**அருந்தவ பலத்தால் போக்க வந்த**
**அண்ணலே கலியுக ஞானியே**
2. ஞானியே ஆறுமுக அவதாரமே
ஞாலமதில் உன் பெருமை கூறி
இனிமைபட ஒளி சூட்சும நூலை
இயம்பிடுவேன் **விளம்பி தேளின் திங்கள்**
3. **திங்களிலே கலிக்கம்ப நாயனாரும்**
**திகதி மூவாறு குசன் வாரமதில்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 18ம் நாள் 04.12.2018, செவ்வாய்க்கிழமை)**
**ஓங்கார உலகமைய உரைப்பேன்**
**ஓம் எனும் ஒலி உலகமெலாம் பரவ**
4. பரவவே பசுமை வளம் காணும்
பரவவே மக்களிடை பக்குவமும்
தரும சிந்தை தயவு பெருகும்
தானதரும சக்தியாக வந்தநல்
5. வந்தநல் அரங்கன் பெருமையை
வையகம் அறிய உணர வேண்டும்
சிந்தைபட குருவாக ஏற்று
செப்பிடுவேன் உலக மக்கள்
6. மக்களெல்லாம் வணங்கி வர
மனமுவந்து தருமமும் செய்து
ஊக்கமுற தொண்டர்களாகி
உயர் சேவை ஆற்றி வருக
7. வருகவே கலியுகமே மாறும்
வாஞ்சைபட தெய்வ சக்திகள்
முருகப் பெருமான் துணைபட
முழுமையாக இறங்கி அருளும்
8. அருள்பட அரங்கன் தருமம் கூட
அகிலமே தருமபலம் கூடியே
இருளில்லா ஞான ஒளி ஆற்றல்
ஏழாம் படை வீடு துவங்கி வலுப்பெறும்

9. பெருமைபட அரங்கன் பெருமை
பேசும் இடங்களெல்லாம் வறுமை
பேரிடர் துன்பமென்பது அணுகா
பெருமைமிகு தேசங்களாக மாறி

10. மாறியே மக்களுக்கு பாதுகாப்பும்
மரணமில்லாப் பெருவாழ்வு திடமும்
தேறி வரும் சகல வளங்களும்
தேற்றமும் ஞானியரால் காணக் கூடும்

11. கூடவே ஏழாம் படை வீட்டை
குவலயத்தார் மனமுருக வேண்டியே
நாடவே பேரிடர்கள் பிரச்சனைகளில்லா
ஞானயுகம் ஆக மாறும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

## மகான் கலிக்கம்ப நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :

அரிய தவங்கள் அநேகம் அநேகம் செய்து வெற்றி கண்டிட்ட அருந்தவ சித்தனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே. தாம் பெற்ற அற்புதமான தவத்தின் சக்திகளை எல்லாம் அறமாக ஆக்கி துன்பம்மிக்க கலியுகத்தினில் உள்ள மக்களை மீட்கவே பயன்படுத்தி கலியுக சிக்கலை போக்கி காத்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட அண்ணலே கலியுக மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதம் மிகுந்த உமது பெருமைகளை ஆற்றலை உலகமெலாம் ஓங்கி கூறியே உலக நலம் கருதியே இவ்வுலகினில் முருகப்பெருமானின் ஞான உலகம் அமைந்திட வேண்டியே ஒளி சூட்சும நூலினை **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 18ம் நாள் 04.12.2018, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே உரைக்கின்றேன் கலிக்கம்ப நாயனார் யானும் என்கிறார் மகான் கலிக்கம்ப நாயனார்.

ஓம் எனும் பிரணவ மந்திரமாகிய முருகப்பெருமானின் ஆதிமூல மந்திரத்தின் ஓசை உலகமெலாம் ஓங்கி ஒலித்திட ஒலித்திட உலகமெலாம் இயற்கையும் மகிழ்ந்து உலகை பசுமை வளமாக்கிடும். உலகம் பசுமை வளம் காணுமப்பா. ஓம் எனும் ஒலி முருகப்பெருமானின் திருநாமங்களுடன் உலகினில் பரவபரவ, ஒலித்திட ஒலித்திட, உலக மக்களிடையே உள்ள தீமையான குணமெலாம் மாற்றம் அடைந்து உலக மக்கள் பக்குவம் அடைவார்கள், அவர்களிடம் உள்ள லோபித்தனமும் தன்னல உணர்வும் மறைந்து பொதுநலம் பெருகி தருமசிந்தை அதிகமாகி மக்களின் மனதினுள்ளே தயவு பெருகும்.

தரும சக்தியால்தான் கலியுகத்தை மாற்ற முடியும் என்றே இவ்வுலகின் மாபெரும் தானதரும சக்தியாக அவதரித்து உலகை காக்க வந்திட்ட அண்ணல் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் பெருமைகளை, ஆற்றலை, தவசக்தியை, ஞானசக்தியை, அவதார நோக்கத்தினை இவ்வுலகம் அறிந்திடவும், உணர்ந்திடவும் வேண்டுமப்பா.

உத்தம மகா ஞான அவதார யோகி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரே இவ்வுலகின் ஒப்பற்ற மகா ஞான சற்குரு என்றே உலக மக்களெல்லாம் சந்தேகம் இன்றி குருவாய் ஏற்றுக் கொண்டு ஆறுமுக அரங்கனாரின் சக்திமிக்க திருவடிகளிலே பயபக்தியுடன் பணிந்து வணங்கி வருவதுடன் அரங்கனின் அற்புத யுகமாற்ற கொள்கையான தருமத்தின் கொள்கையை ஏற்று அவரவரால் இயன்ற அளவு தானதருமங்களை தவறாது கடமையாக செய்து வந்து அரங்கனுக்கு விருப்பமுள்ள தொண்டர்களாக ஆகி உலகினில் அரங்கனின் தானதருமப் பணிகளிலே உதவிகள் செய்து

தொண்டுகள் செய்தும் உயர்வான சேவைகளை தவறாமல் செய்து வந்திட இந்த கலியுகம் வலுவிழந்து ஞானயுகமாக ஆகிடுமப்பா. இத்தகைய உலக மாற்றத்திற்கு அன்பர்களுடனும் தொண்டர்களுடனும் வாஞ்சையோடு தெய்வீக சக்திகளும் ஒன்று கூடி முருகப்பெருமான் துணைபட முழுமையாக இறங்கி அருள் செய்து நிற்குமப்பா.

அருள்மிக்க தொண்டர்களின் தொண்டாலும், தெய்வீக சக்திகளின் அருளினாலும், முருகப்பெருமானின் துணையினாலும் அரங்கனின் தவசக்தி அருள்பலத்தினாலும் அரங்கனின் தருமபலம் பெருக பெருக, இவ்வுலகம் முழுதும் தருமபலம் பெருகி இருள் எனும் அறியாமை உலகினின்று விலகி மாயை எனும் இருள் பெருகி ஞானம் எனும் அருட்பேரொளி அரங்கன் ஞானிகள் துணைபட ஞானபண்டிதன் தலைமைபட யுகமாற்றத்திற்காக உருவாக்கப்பட்ட ஆற்றல்மிக்க ஏழாம்படை வீடாகிய துறையூர் ஓங்காரக்குடிலிலிருந்து வெளிப்பட்டு உலகமெலாம் பரவி உலகமே ஞானத்தினால் வலுப்பெறும்.

பெருமைமிக்க மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் பெருமைகளை மிகப் பெருமையோடு பேசப்படும் இடங்களில் எல்லாம் வறுமை என்பதே இல்லாமல் போகும். பெரும் துன்பம் அளிக்கும் இயற்கை பேரிடர்களும் வராது, அரங்கன் பெருமை பேசப்படும் தேசங்கள் எல்லாம் தனது நிலை மாறி நல்ல ஞானமுள்ள தேசங்களாக மாறி மக்களுக்கு பாதுகாப்பளிக்கும் தயவுமிக்க தேசங்களாக ஆகிடும், தேசத்தின் மக்களெல்லாம் மரணத்தையும் வெல்லுகின்ற மரணமில்லாப் பெருவாழ்வை பெறுகின்ற திடமான வழிகளையும் பெறுவதோடு நாட்டின் செல்வவளம் பெருகிடும், சகல வளங்களும் பெருகி மக்கள் ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளும் வாய்ப்புகளையும் சக்திமிக்க ஞானியர்களால் பெறுவார்கள்.

ஆதலினாலே உலக மக்களே ஆற்றல்மிக்க ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை பயபக்தியுடன் பணிந்து மனம் உருக வேண்டுதல் வைத்து நாடி வர, உங்களது தேசத்தினில் இயற்கை பேரிடர்களும் இயற்கை துன்பங்களும் இல்லாது ஞானம்மிக்க ஞானதேசமாக ஆகி இவ்வுலகமே ஞானஉலகமாக ஆகி ஞானஆட்சி உருவாகி கலியுகமே ஞானயுகமாக ஆகி சிறப்படையும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் கலிக்கம்பநாயனார்.

–சுபம்–